www.freetnbooks.com

11205

| 11 - STD | அரையாண்டுத் தேர்வு - 2025 | |
|---|---|---|
| நேரம்: 3:00 மணி | உயிரியல் | மதிப்பெண்கள்: 70 |

## உயிரி - தாவரவியல் (மதிப்பெண்கள் : 35)

### பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **8 x 1 = 8**

1. சரியாகப் பொருந்திய இணையைக் கண்டறிக:
   (அ) ஆக்டினோமைசீட்கள் - தாமதித்த வெப்பு நோய்
   (ஆ) மைக்கோபிளாஸ்மா - கழலைத் தாடை நோய்
   (இ) பாக்டீரியங்கள் - கழலை நோய்
   (ஈ) பூஞ்சைகள் - சந்தனக் கூர்நுனி நோய்
2. டெரிடோஃபைட்களில் கேமீட்டக தாவர சந்ததியைக் குறிப்பது:
   (அ) உடலம் (ஆ) முன்உடலம் (இ) கூம்பு (ஈ) வேர்த்தாங்கி
3. லைசோசோம்களை உருவாக்கும் நுண்ணுறுப்புகள் எது?
   (அ) மைட்டோகாண்டிரியா (ஆ) எண்டோபிளாச வலை
   (இ) ரைபோசோம்கள் (ஈ) கோல்கை உடலம்
4. கீழ்க்கண்ட எந்த வகை நீராவிப்போக்கு மிகவும் குறைவாக நடைபெறுகின்றன?
   (அ) இலைத்துளை நீராவிப்போக்கு (ஆ) பட்டைத் துளை நீராவிப் போக்கு
   (இ) கியூட்டிகிள் நீராவிப்போக்கு (ஈ) மேற்கூறிய அனைத்தும்
5. மொத்த செல் எடையில் 15% காணப்படும் பகுதிக்கூறு யாவை?
   (அ) நீர் (ஆ) கார்போஹைட்ரேட் (இ) புரதம் (ஈ) லிப்பிடுகள்
6. C3 சுழற்சியில் நுழையும் ஒவ்வொரு $CO_2$ மூலக்கூறுகளுக்கும் தேவைப்படும் ATP மற்றும் NADPH எண்ணிக்கை
   (அ) 2 ATP + 2 NADPH (ஆ) 2 ATP + 3 NADPH
   (இ) 3 ATP + 2 NADPH (ஈ) 3 ATP + 3 NADPH
7. கிளைக்காலிசிஸ் மற்றும் கிரப்ஸ் சுழற்சியினை இணைக்கும் சேர்மம்
   (அ) சக்ஸினிக் அமிலம் (ஆ) பைருவிக் அமிலம் (இ) அசிட்டைல் CoA (ஈ) சிட்ரிக் அமிலம்
8. ஒரு பால் மலர்கள் கொண்ட தாவரங்களில் இந்த ஹார்மோன்களால் இனமாற்றம் நிகழ்கிறது:
   (அ) எத்தனால் (ஆ) சைட்டோகைனின் (இ) ABA (ஈ) ஆக்சின்

### பகுதி - II

**ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்** **4 x 2 = 8**

9. பிக்னோசைலிக் பற்றி நீவிர் அறிவது யாது?
10. திரள் கனி சிறுகுறிப்பு வரைக. எடுத்துக்காட்டு தருக.
11. மறைமுக செல்பகுப்பின் முக்கியத்துவம் யாது?
12. இருபக்க ஒருங்கமைந்த வாஸ்குலார் கற்றை படம் வரைந்து பாகம் குறிக்க.
13. வன்கட்டை மற்றும் மென்கட்டை வேறுபாடு தருக.
14. நீரியல் திறனை கட்டுப்படுத்தும் கூறுகள் யாவை?

### பகுதி - III

**ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும் (வினா எண் 18-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)** **3 x 3 = 9**

15. வேரின் பகுதிகளை படம் வரைந்து பாகம் குறிக்க.
16. நீரின் பண்புகள் யாவை?
17. நைட்ரஜன் நிலைநிறுத்தத்தில் நைட்ரோஜனேஸ் நொதியின் பங்கினை குறிப்பிடுக.
18. $C_3$ மற்றும் $C_4$ தாவரங்களின் வேறுபாடுகள் தருக.
19. சைட்டோகைனின் வாழ்வியல் விளைவுகள் எவையேனும் மூன்று தருக.

### பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** **2 x 5 = 10**

20. (அ) ஐந்துலக வகைப்பாட்டினை விவாதி. அதன் நிறை குறைகளைப் பற்றி குறிப்பு தருக. **(அல்லது)**
    (ஆ) கிளைட்டோரியா டெர்னேஷியா கலைச்சொற்களால் விளக்குக.
21. (அ) இருவிதையிலை வேருக்கும் ஒருவிதையிலை வேருக்கும் இடையே உள்ள உள்ளமைப்பியல் வேறுபாடுகளை எழுதுக. **(அல்லது)**
    ஆ) கிளைக்காலிசிஸ் சுழற்சியின் படிநிலைகளை விவரி.



www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with Cam

www.freetnbooks.com

## உயிரி - விலங்கியல் (மதிப்பெண்கள்: 35)

### பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** **8 x 1 = 8**

1. பல்லுயிர் தன்மை என்ற பதத்தைச் சூட்டியவர்
   (அ) வால்டர் ரோசன் (ஆ) எ.ஜி.டான்ஸ்லே (இ) அரிஸ்டாட்டில் (ஈ) எ.பி.டி. காண்டோல்
2. கால்களற்ற இருவாழ்வி
   (அ) இத்தியோஃபிஸ் (ஆ) ஹைலா (இ) ரானா (ஈ) சல்மான்டர்
3. தவளையின் சிறுநீரகம்:
   (அ) இமீசோ நெஃப்ராஸ் (ஆ) புரோ நெஃப்ராஸ்
   (இ) மினே நெஃப்ராஸ் (ஈ) மெட்டா நெஃப்ராஸ்
4. கொழுப்பு செரிமானத்தின் முதல்படி:
   (அ) பால்மமாதல் (ஆ) நொதி செயல்பாடு
   (இ) லாக்டீல்கள் வழியே உட்கிரகித்தல் (ஈ) அடிப்போஸ் திசுக்களில் சேமிப்பு
5. இரத்தம் உறைதலில் பங்கேற்கும் பிளாஸ்மா புரதம் எது?
   (அ) குளோபுலின் (ஆ) ஃபைப்ரினோஜன் (இ) அல்புமின் (ஈ) சீரம் அமைலேஸ்
6. சிறுநீரக நுண்குழல்களில் நீர் மீள உறிஞ்சப்படுவதறுக்கு உதவும் ஹார்மோன்:
   (அ) கோலிசிஸ்டோகைனின் (ஆ) ஆஞ்சியோடென்சின் II
   (இ) ஆன்டி டையூரிட்டிக் ஹார்மோன் (ஈ) பான்கிரியோசைமின்
7. இஸின்கிளாஸ் எதில் பயன்படுத்தப்படுகிறது?
   (அ) ஒயின் தயாரித்தல் (ஆ) ஒயினை சுத்திகரிக்க
   (இ) ஒயினை வடிகட்டிப் பிரித்தல் (ஈ) ஒயினைப் பதப்படுத்துதல்
8. நோய்த்தடைக் காப்புடன் தொடர்புடைய சுரப்பி எது?
   (அ) பீனியல் சுரப்பி (ஆ) அட்ரீனல் சுரப்பி (இ) தைமஸ் சுரப்பி (ஈ) பாராதைராய்டு சுரப்பி

### பகுதி - II

**ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்** **4 x 2 = 8**

9. கோவேறு கழுதை ஏன் மலட்டுத்தன்மை உடையதாக உள்ளது?
10. ஊர்வன உயிரிகள் நில வாழ்க்கை வெற்றிக்கான அவற்றின் பண்புகளின் பங்கீடு யாது?
11. இரத்தம் ஏன் தனித்துவமான இணைப்புத்திசு என்றழைக்கப்படுகிறது?
12. தவளை இரத்தத்தின் பகுதி பொருள்கள் யாவை?
13. கிரிடினிசத்தின் அறிகுறிகளைக் குறிப்பிடுக.
14. மீன்களின் உணவூட்ட மதிப்புகள் யாவை?

### பகுதி - III

**ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும் (வினா எண் 19-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)** **3 x 3 = 9**

15. செயற்கை முறை விந்தூட்டத்தின் பயன்கள் யாவை?
16. லிம்பிக் மண்டலம் ஏன் உணர்ச்சி மூளை எனப்படுகிறது? அதன் பகுதிகளைக் கூறுக.
17. மனித சிறுநீரகத்தின் நீள்வெட்டுத் தோற்றம் படம் வரைந்து பாகங்களை குறி.
18. தமனி மற்றும் சிரைகளை வேறுபடுத்துக.
19. தைமஸ் சுரப்பியானது நாளமில்லாச் சுரப்பியாகவும் மற்றும் நிணநீர் உறுப்பாகவும் செயலாற்றுகிறது?

### பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** **2 x 5 = 10**

20. (அ) பட்டுப்புழுவின் வாழ்க்கை சுழற்சியை விவரி.

**(அல்லது)**

(ஆ) தசைமண்டலத்தின் கோளாறுகள் ஏதேனும் நான்கினை விளக்குக.

21. (அ) தவளையின் ஆண் இனப்பெருக்க மண்டலத்தை விளக்குக.

**(அல்லது)**

(ஆ) தொகுதி கணுக்காலிகளின் பொதுப்பண்புகளை எழுதுக.



www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with Cam